*6*

# வெற்றிகொள்ளுதலின் காலம், கி.மு. 1451–1400

***யோர்தானைக் கடந்ததிலிருந்து***
***யோசுவாவின் மரணம் வரை***
***யோசு. 1-24***

## I. யோர்தானைக் கடத்தல்.

***1. புதிய தலைவர்.*** மோசே இஸ்ரவேலர்களை யோர்தானின் கிழக்குப் பகுதியில் முகாமிருக்கச் செய்து (அவர்களை விட்டு) பிரிந்து சென்றார் (மரணம் அடைந்தார்). சீகோன் மற்றும் ஓக் ஆகியோர்மீது கொண்டிருந்த வெற்றிகள் நதியின் கிழக்கில் இருந்த படுகை நிலங்களை பெற்றுத் தந்திருந்தன. கானான் என்பது யோர்தானுக்கு மேற்கிலிருந்த பகுதியையே குறிப்பிடுவதாயிருந்தது; இது அரண் சூழ்ந்த நகர்களில் வாழ்ந்த யுத்த விரும்பிகளாயிருந்த மக்களைக் கூட்டம் கூட்டமாய்க் கொண்ட மலை நாடாயிருந்தது. அவர்களுக்கு (இஸ்ரவேலர்களுக்கு) முன்னால் இருந்தது இலேசான பணிப்பொறுப்பாய் இல்லை. மாபெரும் நிகழ்ச்சிகள் மாபெரும் மக்களையே அழைக்கின்றன. இஸ்ரவேலுக்கு இரண்டாவது மோசே ஒருவர் ஒருக்காலும் இருந்ததில்லை. ஆனால் புதிய நிகழ்ச்சிகள் புதிய மனிதர்களை அழைக்கின்றன. விடுதலை மற்றும் ஒருங்கமைத்தல் ஆகியவற்றிற்காக மோசேயைக் கொடுத்த அதே தேவனே இப்பொழுது வெற்றி பெறுதல் மற்றும் குடியமருதல் ஆகியவற்றிற்காக யோசுவாவைக் கொடுக்கிறார்.

***2. யோர்தான் (நதி) பிரிகின்றது.***—இஸ்ரவேலர்கள் தங்களைப் பின்னாலிருந்து வலிமைமிக்க விரோதிகள், துரத்திய நிலையில் செங்கடலுக்கு வந்து சேர்ந்திருந்தனர். அவர்கள் தங்களை வலிமைமிக்க விரோதிகள் எதிர்கொண்டு வந்த நிலையில் யோர்தான் நதிக்கு வந்து சேர்ந்தனர். கடலில் போலவே இங்கும் கூட, தேவன் மீதும் தங்கள் தலைவர் மீதும் விசுவாசத்தினால் அவர்கள் ஏவப்படும்படியாக சைகையினாலான அற்புதம் ஒன்று செயல்படுகின்றது. அது அறுவடைக் காலமாய் இருந்தது. லீபனோன் மலையில் உருகும் பனிக்கட்டிகள் யோர்தானின் தாழ் நிலத்தில் வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தன. அங்கு படகுகளும் இல்லை பாலங்களும் இல்லை. ஆனால் ஆசாரியர்கள் பரிசுத்த பேழையைச் சுமந்து கொண்டு நதியின் விளிம்பில் கால் எடுத்து வைக்கையில், தண்ணீர் பிரிந்து விலகிற்று, இஸ்ரவேலர்கள் வெறுமையான ஆற்றுப் படுகையினூடாக

அணிவகுத்துச் சென்றனர். ஆற்றுப் படுகையில் ஒன்றும் அவர்கள் இரவுக்காகத் தங்கியிருந்த கில்காலில் ஒன்றும் ஆக, இரண்டு நினைவு(த் தூண்) கற்கள் எழுப்பப்பட்டன.

***3. கில்காலில் முகாமிட்டுத் தங்குதல்.***—அலைந்து திரிந்த காலங்களின் போது விட்டுவிடப்பட்டிருந்த விருத்தசேதனச் சடங்கானது இவ்விடத்தில் புதுப்பிக்கப்பட்டது, மற்றும் அவர்களின் அவிசுவாசமும் அதற்கான தண்டனையும் புறம்பே உருண்டோடும்படி செய்யப்பட்டது; ஆகவே அவ்விடம் கில்கால் என்று பெயர் பெற்றது. இதுவும் கூட கடந்து செல்லுதலின் இரவாக இருந்ததினால் இவ்விடத்திலும் மீண்டும் ஒருமுறை பஸ்காவானது ஆசரிக்கப்பட்டது. அந்த வேளையில் மரண தூதர் நாட்டின் மீது கடந்து சென்ற பிரசன்னத்தினால் எகிப்தியர்கள் பயமடைந்தார்கள்; இப்பொழுது, எரிகோவின் மதில்களுக்குப் பின்னால் கானானியர்கள் பயத்தினால் குறுகிப் போயிருந்தார்கள். இவ்விடத்தில் மன்னா பொழிதலும் ஒழிந்து போனது; மற்றும் இவ்விடத்திலோ அல்லது பெத்தேலின் அருகாமையில் உள்ள இன்னொரு கில்காலிலோ, இதுவரையிலும் வெற்றி கொள்ளப்பட்ட கானான் நாட்டின் பகுதிகள் இனங்களின் மத்தியில் பிரித்துக் கொடுக்கப்படும் வரைக்கும் இஸ்ரவேலர்கள் முகாமிட்டுத் தங்கியிருந்தார்கள்.

## II. எரிகோவைக் கைப்பற்றுதல்.

யோர்தானைக் கடப்பதற்கு முன் யோசுவா, விரோதியின் பலமுள்ள நிலைகளை வேவு பார்த்து வருவதற்காக ஒற்றர்களை அனுப்பி வைத்தார். ராகாப் என்ற பெயர் கொண்ட எரிகோ நகரப் பெண்ணொருத்தி தேவனுடைய மக்களின் எதிர்காலத்தின் மீது உறுதியான விசுவாசம் கொண்டவளாய், அந்த ஒற்றர்களை மறைத்து வைத்தாள் மற்றும் அந்நகரைக் கைப்பற்றும் போது அவளது வீட்டாருக்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது. மோசே தனக்கு கட்டளைகளைப் பெற்றுக் கொண்டது போலவே கில்காலில் முகாமிட்டிருந்த வேளையில் யோசுவாவும் தனக்குக் கட்டளைகளைப் பெற்றுக் கொண்டார். இருப்பினும் தேவன் (யோசுவாவுக்கு) எரியும் முட்புதரில் தரிசனமாகாமல் உருவிய பட்டயத்துடன் தரிசனமானார், இது வெற்றி கொள்ளும் பணியைக் குறிப்பதாய் உணர்த்துவதாயிருந்தது. ஆனால் அது மனிதனுடைய பணியாய் இருப்பதற்கு மாறாக, தேவனுடைய பணியாய் இருந்ததென்பது, எரிகோவைக் கைப்பற்றுதலுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிமுறைகளின் வெளிவடிவமைப்பில்/செயல் நடவடிக்கையில் இருந்து வெளிப்படுத்தப்பட்டது. எரிகோ (என்ற நகர்) கடந்து செல்ல வேண்டிய இடத்தில் இருந்தது. அது கானானின் நுழைவாயிலாக இருந்தது. அது பின்னால் விட்டுச் செல்லப்படக் கூடாததாக இருந்தது. அதன் மதில்களை இடித்து வீழ்த்துவதற்கு இஸ்ரவேலரிடம் இயந்திரப் பொறிகள் எதுவும் இல்லை. தேவனுடைய கட்டளையின்படி, அவர்கள் பரிசுத்த பேழையைச் சுமந்து கொண்டு தொடர்ச்சியாக ஆறு நாட்கள் அதைச் சுற்றி வந்தார்கள், மற்றும் ஏழாம் நாளில் ஏழு முறைகள்

*அதைச் சுற்றி வந்தார்கள், அவர்கள் தங்கள் எக்காளங்களினால் உரத்த சத்தமிட்ட பொழுது, மதில்கள் விழுந்தன, எரிகோ அவர்களுடைய தாயிற்று. யெகோவாவே எகிப்திய நுகத்தை முறித்து, கடலின் வழியே வழி திறந்து, அவர்களுக்கு உணவூட்டி, வனாந்திரத்தில் வழிநடத்தி, அவர்களுக்குத் தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்து, அவர்களுக்காக யோர்தான் நதியைப் பிரித்தார். மற்றும் யெகோவாவே மோசமான கானானியரின் உடமைகளை எடுத்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை தமது உடன்படிக்கையின் மக்களுக்குக் கொடுத்ததினால் தம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றினார்.*

## III. கானானின் மையப்பகுதியை வெற்றி கொள்ளுதல்.

***1. ஆயி பட்டணத்தைக் கைப்பற்றுதல்.***—*ஆயி என்பது கானானின் மையப் பகுதிக்குத் திறவுகோலாக இருந்தது. முதல் தாக்குதலில் இஸ்ர வேலர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். இதற்கான காரணமானது எரிகோவின் சேதமான பொருட்களில் இருந்து ஒரு தங்கப் பாளத்தையும், வெள்ளிப் பணத்தையும், ஒரு பாபிலோனிய சால்வையையும் எடுத்துத் தனக்கென்று வைத்துக் கொண்ட பாவம் ஆகானில் கண்டறியப்பட்டது. அது சுயநலப் பேராசைக்கான வேளையாய் இருந்ததில்லை; மற்றும் ஆகான் தனது பாவத்திலிருந்து நீங்கி தூய்மைப்படத் தனது உயிரையே கொடுக்க வேண்டியதாயிற்று. இரண்டாம் முறை தாக்கிய பொழுது, ஆயி நகர் மற்றும் கானானின் மையப் பகுதி முற்றிலும் அவர்களுடையதாயிற்று.*

***2. சீகேமில் சபை கூடுதல்.***—*இஸ்ரவேலர் இப்பொழுது (கானான்) நாட்டின் மையப்பகுதியில் உள்ளனர். (அவர்களது) முற்பிதாக்களின் காலடிச் சுவடுகள் அவர்களைச் சுற்றிலும் இருக்கின்றன. சீகேமில் ஆபிரகாம் தமது முதல் கூடாரத்தை நாட்டி, தமது பலிபீடத்தைக் கட்டியெழுப்பி யிருந்தார். நாடோடியாய் இருந்த யாக்கோபு பெத்தேலில் தரிசனம் கண்டிருந்து, தமது நினைவுச் சின்னத்தை எழுப்பியிருந்தார். அவர் தமது (மாமன் வீட்டில் இருந்த) அந்நிய நாட்டு இருப்பிற்குப் பின் திரும்பி வந்த பிறகு சீகேமில் சஞ்சரித்து இருந்தார், மற்றும் தமது குடும்பத்தாரால் மெசபொத்தாமியாவிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த விக்கிரகாராதனை யின் சொரூபங்களை அங்கு புதைத்திருந்தார். மற்றும் இப்பொழுது, தெய்வீக வல்லமையினால் தெய்வீக உடன்படிக்கை நிறைவேறியிருந்தது, உடன்படிக்கையின் மதச் சடங்குடன் கூடிய புதுப்பித்தலும் நினைவு கூருதலும் இருக்கும் என்பது பொருத்தமானதாக உள்ளது. ஆகவே, மோசே யின் முந்திய அறிவுறுத்தல்களின்படி (உபா. 27) சீகேமில் ஒரு மதச் சடங்குக் கூட்டம் நடத்தப்படுகின்றது. சீகேம், வடக்கில் ஏபால் மலையும், தெற்கில் கெரீசிம் மலையும் உள்ளதும் அவற்றிற்கிடையில் அமைந்திருந்த பள்ளத் தாக்கில் உள்ள ஊருமாய் இருக்கின்றது. அந்தப் பள்ளத்தாக்கின் மத்தியில் லேவியர்கள் நின்றனர். அவர்கள், கீழ்ப்படிதலுக்காக ஆறு கோத்திரங்களின் மீது ஆசீர்வாதத்தைக் கூறுகையில் மக்கள் கெரீசிம் மலையின் மீதிருந்து*

"ஆமென்" என்று பதில் அளித்தார்கள்; அவர்கள் கீழ்ப்படியாமைக்கான சாபத்தை கூறுகையில் மற்ற ஆறு கோத்திரங்களின் மக்கள் ஏபால் மலையிலிருந்து தங்கள் "ஆமென்" என்பதை உரத்த சத்தமிட்டுக் கூறினார்கள். பின்பு பிரமாணங்கள் பொறிக்கப்பட்ட ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது, மற்றும் பலி செலுத்தும் பண்டிகையொன்று கொண்டாடப்பட்டது.

## IV. தென்பகுதியில் அரசியல் கூட்டும் வெற்றி கொள்ளுதலும்.

***1. கிபியோனியர்களுடன் அவர்களின் (இஸ்ரவேலர்களின்) இணைவு.*** —வெற்றி கொள்ளுதலின் ஆண்டுகளில் இஸ்ரவேலரின் பிரதான முகாமானது கில்காலில் இருந்ததாகக் காணப்படுகின்றது, இது கானானின் மத்திய பகுதியில் அமைந்திருந்தது. ஆயி (நகர்) விழுந்த பின்பு விரைவிலேயே ஆயிக்கு நேர்தெற்கில் இருந்த ஒரு நகரமான கிபியோனிலிருந்து செய்தியாளர்கள் யோசுவாவிடம் வந்து, தாங்கள் தூர தேசத்திலிருந்து வந்ததாக உரிமைகோரி, தங்கள் சொந்தப் பாதுகாப்பைக்கோரும் ஒரு உடன்படிக்கையை முன் மொழிகின்றனர். யோசுவா சம்மதித்தார். வஞ்சிக்கப்பட்டதை அறிந்த பின் அவர் (யோசுவா) அவர்களை அழிப்பதில்லை என்று உடன்படிக்கையைப் பரிசுத்தமாய்க் காத்தார், ஆனால் அவர்களை இஸ்ரவேலர்களுக்கு "விறகு வெட்டுபவர்களாகவும், தண்ணீர் சுமப்பவர்களாகவும்" ஆக்கினார்.

***2. பெத்தொரோனில் யுத்தம்.***—கிபியோனுடனான உடன்படிக்கையானது தெற்கே அமைந்திருந்த எருசலேம், எபிரோன், யர்மூத், லாகிஸ், மற்றும் எக்லோன் ஆகிய நகர்களுடன் தற்காப்பு மற்றும் குற்றப்படுத்துதல் ஆகிய இரு செயல்களுக்குமான ஒப்பந்தம் ஒன்றை அமைக்க வழிநடத்திற்று. அவர்கள் கிபியோனைத் தாக்கினர், இது யோசுவாவுக்குப் பிரியமாய் இருந்தது. அவர் இரவில் அணி வகுத்துச் சென்று கூட்டாக வந்தவர்களைத் தாக்கினார், மற்றும் பெத்தொரோனில் பெரும் யுத்தத்தில் அவர்களை தோல்வியடையச் செய்தார். இது பழங்காலப் பாடல் ஒன்றின்படி (யோசு. 10:12, 13) யோசுவாவின் கட்டளைக்கிணங்க சூரியனும், சந்திரனும் (சுற்றாமல்) நின்ற "நீண்ட நாளாகும்."

## V. வடபகுதியில் அரசியல் கூட்டும் வெற்றி கொள்ளுதலும்.

கானானியர்களால் இன்னொரு முறை கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வடக்கில் இருந்த ஆத்சோரின் வல்லமைமிகுந்த பிரதானியான யாபீன் என்பவர் தலைமை வகித்து வந்து யுத்தக் கூட்டுறவை மேரோமின் தண்ணீர் அருகே யோசுவா தோல்வியடையச் செய்தார். இது கூட்டமான தடையை/எதிர்ப்பை முடிவுக்குக் கொண்டு வந்தது. பல கோத்திரங்கள் வெற்றி கொள்ளுதலை முடிக்கையில் போராட்டமானது மிகச் சிறு உள்ளூர்

போட்டிகளாய் ஒழிந்து போயிற்று என்று விரிவாய்க் கூறப்பட்டுள்ளது. இது தேவன் இணைத்திருந்த முற்றான தன்மையினால் செய்யப்பட்ட தாயிருந்ததில்லை, மற்றும் இது அவர்களின் இனவாழ்வின் நோக்கத்திற்கு மிகவும் அவசியமான பணியாக இருந்தது. (பிற) இனங்களுடன் உடன் படிக்கை மற்றும் கலப்புத் திருமணங்கள் ஆகியவற்றிலேயே அவர்களின் அழிவு இருந்தது. அவர்கள் முற்றிலும் தனிப்பட்டு நிற்பதென்பதே அவர்களின் ஒரே பாதுகாப்பாகவும் சுத்தமான பக்தியாகவும் இருந்தது. கானானியர்களை வெளியேற்றத் தவறியது என்பதே அடுத்த காலகட்டத் தில் அவர்களின் நிலைமைக்குத் திறவுகோலாய் உள்ளது.

## VI. நாடு பங்கிடப்படுதலும் யோசுவாவின் மரணமும்.

***1. நாடு பங்கிடப்படுதல்.***—ஒன்றிணைந்து எதிர்த்து நிற்றல் என்பதை இயலாததாக ஆக்கின நிலையில், நாட்டைப் பன்னிரு கோத்திரங்களுக்கும் சீட்டுப் போட்டுப் பிரித்துக் கொடுக்கும் செயலில் யோசுவா ஈடுபட்டார். இந்த ஒதுக்கீட்டில் லேவியர்கள் ஒரு கோத்திரமாகக் கருதப்படவில்லை, ஆனால் அவர்கள் கானான் முழுவதிலும் பரவலாக இருந்த நாற்பத்தி எட்டு நகரங்களைப் பெற்றார்கள். இவைகளில் யோர்தானுக்குக் கிழக்கில் இருந்த கோலான், கீலேயாத்தின் ராமோத் மற்றும் பேசேர், யோர்தானுக்கு மேற்கில் இருந்த காதேஸ், சீகேம் மற்றும் எபிரோன் என்ற ஆறு அடைக்கலப் பட்டணங்களும் இருந்தன. யோசேப்பின் இரு மகன்களான எப்பிராயிமை யும் மனாசேயையும் யாக்கோபு தமது மகன்களாகச் சுவிகரித்திருந்தார், இவ்விதம், லேவி (கோத்திரம்) இல்லாமலேயே பன்னிரெண்டு கோத்திரங் கள் ஏற்படுத்தப்பட்டன. அவை, ரூபன், சிமியோன், யூத, இசக்கார், செபுலோன், தாண், நப்தலி, காத், ஆசேர், எப்பிராயீம், மனாசே மற்றும் பென்யமீன் கோத்திரங்களாகும்.

***2. யோசுவாவின் பிரியாவிடையும் மரணமும்.***—எகிப்திலும் செங்கடலிலும் அற்புதங்களைக் கண்டிருந்த தலைமுறையில் யோசுவா மிக நீண்ட காலம் வாழ்ந்திருந்தார். காலேப் யோசுவா ஆகியோரைத் தவிர, அவர்கள் யாவரும் வனாந்திரத்தில் மடிந்து வீழ்ந்தனர், இவர் (யோசுவா) தம் நூற்றுப்பத்து வயது வரை வாழ்ந்தார். யேகோவாவுக்கும் உடன்படிக்கைக்கும் கடைசி வரையிலும் பற்றுறுதி கொண்டு வாழ்ந்த அவர், மீண்டும் ஒருமுறை, வரலாற்றுப் புகழ்பெற்ற, சீகேமில் (பன்னிரு) கோத்திரங்களையும் பரிசுத்த கூட்டமாய் கூடி வர அழைக்கின்றார். அங்கு அவர் வரலாற்றை மறுகண்ணோட்டமிடுகிறார், மற்றும் விசுவாச விலக்கத்தின் அபாயம் குறித்து அவர்களை எச்சரிக்கை செய்கின்றார். "... யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள் ... நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்,"[1] இப்படிப்பட்ட மாண்புமிக்க வார்த்தைகளுடன் அவர், தேவனுடைய ஊழியத்திற்கென்று அவர்களையும் தமது சொந்தக் குடும்பத்தையும் (மீண்டும்) புதிதாய் ஒப்புவிக்க நாடுகின்றார். பின்பு இந்த இன உடன்படிக்கையின்

புதுப்பித்தலுக்கான நினைவுச் சின்னக் கல் ஒன்றை நாட்டி, கூட்டத்தைக் கலையச் செய்து, பின் விரைவிலேயே தனது பிதாக்களுடன் சேர்த்துக் கொள்ளப்படுகின்றார்.

---

குறிப்பு

[1]*யோசுவா 24:15.*